17th March 1960]

SRI N. K. PALANISAMI: இந்த திட்டம் குடும்பங்களுக்கு எப்பொழுது அமுலுக்கு வரும்? இதற்காக சர்க்கார் எவ்வளவு பணம் ஒதுக்கியிருக்கிறார்கள்?

THE HON. SRI R. VENKATARAMAN: ராஜ்ஜிய சர்க்கார் ஒரு கொள்கையை வகுத்துக் கொண்டது, ராஜ்யத்தில் இருக்கக்கூடிய, 1,500 தொழிலாளிகள் இருக்கக் கூடிய இடங்களில், எவ்வளவு பேர் திட்டத்தின் கீழ் வரமுடியுமோ அவர்களுக்கு முதலில் அமல் செய்து விட்டுத்தான், பிறகு குடும்பங்களுக்குச் செய்ய வேண்டுமென்று முடிவு எடுத்தோம். இந்த ராச்சியத்தில் சற்றேறக்குறைய 90 பர்செண்டுக்கு விஸ்தரித்து விடுவோம்; இரண்டு மூன்று இடங்கள் பாக்கியிருக்கலாம். ஆகவே, அதற்குப் பின்பு குடும்பங்களுக்கு விஸ்தரிப்போம்.

SRI K. B. S. MANI: 1,500 தொழிலாளிகள் இருக்கும் இடங்களுக்குத்தான் விஸ்தரிக்கப்படும் என்று சொன்னார்கள். அப்படியானால், சிறிய தொழிற்சாலைகளில் இருப்பவர்கள் கஷ்டப் படவேண்டியதுதானா? கஷ்டப்பட்டால், அதற்கு அரசாங்கம் ஏதாவது செய்யுமா?

THE HON. SRI R. VENKATARAMAN: கனம் அங்கத்தினர் இந்த திட்டத்தின் விவரங்களைத் தெரிந்து கொண்டால், இதில் இருக்கக் கூடிய கஷ்டங்கள் தெரிந்து விடும். இதற்குத் தனியாக ஆஸ்பத்திரி வைக்க வேண்டும். பல முக்கியமான கருவிகள் வேண்டும். எக்ஸ்ரே வைக்க வேண்டும். 1,000 தொழிலாளிகள் இருக்கும் இடத்திற்கும் வைத்தால், செலவு ஏராளமாக ஆகிவிடும். அதனால்தான் 1,500 தொழிலாளிகளுக்கு விஸ்தரித்த பிறகு, மூன்றாவது திட்டத்தில், நிதிவசதி சரியாக இருக்குமானால், 1,000 தொழிலாளிகளுக்கும் விஸ்தரிக்கக்கூடிய முறையில் அடுத்த கட்டத்தில் ஏற்பாடு செய்யலாம்.

SRI A. GOVINDASAMY: தென்னாற்காடு மாவட்டத்தில், சர்க்கரை ஆலையிருக்கும் நெல்லிக்குப்பத்தில், கிட்டத்தட்ட 3,000 தொழிலாளிகள் இருக்கிறார்களே, அங்கே இந்த திட்டம் அமுலாக்கப் பட்டுவிட்டதா? இல்லையென்றால், எப்பொழுது அமுலாக்கப்படும்.

THE HON. SRI R. VENKATARAMAN: அதற்குத் தனிக் கேள்வி போடவேண்டும்.

Ceylon repatriates

*436 Q.—SRI V. K. KOTHANDARAMAN: கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

இலங்கையில் இருந்து நாடு கடத்தப்பட்ட தமிழ்நாடு வந்துள்ளவர்களுக்கு என்னென்ன முறைகளில் வாழ்க்கையை நடத்த நிவாரணம் அளிக்கப்பட்டுள்ளது? எந்தெந்த ஜில்லாக்களில்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: A statement[a] is placed on the table of the House.

[a] Printed as Appendix II on pages 851–852 infra.

[17th March 1960

SRI V. K. KOTHANDARAMAN: இலங்கையிலிருந்து நாடு கடத்தப்படுபவர்கள் எவ்வளவு பேர்? எதனுல் நாடு கடத்தப் படுகிறார்கள்? அப்படி நாடு கடத்தப்பட்டவர்களுக்காக, நாசரேத்தில் ஒரு ஸ்பின்னிங் மில் கட்ட ரூ. 10 லட்சம் ஒதுக்கப் பட்டிருக்கிறது என்று சொல்லப் படுகிறதே, அந்த மில் ஆரம்பம் ஆகிவிட்டதா, அதில் தாயகம் திரும்பியவர்கள் எவ்வளவு பேர்கள் வேலை செய்கிறார்கள்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கனம் அங்கத்தினர் கேட்கும் தகவல்களுக்குத் தனிக் கேள்வி போடவேண்டும்.

SRI S. NAGARAJA MONIGAR: ஸார், இப்பொழுது பிற நாடுகளிலிருந்து இந்திய மக்கள் திரும்பி வந்து கொண்டு இருப் பதற்கு என்ன காரணம்? நம் நாட்டுக் கொள்கையா, அல்லது தனிப்பட்டவர்களின் விரும்பத்தகாத செய்கைகளா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: பலபேர் இன்னுட்டி லிருந்து சிலோன் முதலிய நாடுகளுக்கு சென்று, தொழிலில் ஈடுபட்டார்கள். வேலை கொடுத்தார்கள். சிலர் அந்நாட்டுப் பிரஜைகளாக ஏற்றுக் கொள்ளப் படுகிறார்கள். மற்றவர்கள் போக்குவரத்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களில் சிலர் சிலோன் நாட்டை விட்டு இங்கே வருகிறார்கள். அவர் களுக்கு வசதிகள் செய்து கொடுக்க வேண்டுவது அவசிய மாகிறது.

Minimum wages for agricultural labourers

* 437 *Q.*—SRI C. MUTHIAH: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government are examining the question of fixing the minimum wages of agricultural labourers in Thanjavur district under the Minimum Wages Act; and

(*b*) if so, when it will be introduced?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) & (*b*) No Sir. The wages for the agricultural labourers in the Thanjavur district are governed by the Tanjore Pannaiyal Protection Act, 1952, which came into force on 23rd August 1952.

SRI C. MUTHIAH: பண்ணையாள் சட்டத்தில் வராத தினசரி தொழிலாளர்களுக்கு கூலி நிர்ணயம் செய்யக்கூடிய சட்டத்தை 1959-ம் ஆண்டுக்குள் கொண்டுவரப்போவதாகச் சொன்னார்கள். சொந்த ஜில்லாவை விட்டு இதர ஜில்லாக் களுக்கு எல்லாம் அதைச் செய்த அமைச்சர் அவர்கள் சொந்த ஜில்லாவுக்கு அதைச் செய்வதற்கு எத்தனை காலம் ஆகும் என்று கேட்கிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN: இதன்காரணமாக சொந்த ஜில்லாவுக்குப் பாரபட்சம் காட்டுகிறார்கள் என்று சொல்லமாட்டார்கள் அல்லவா?